ஈரோடு மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வளர்ச்சி) அவர்களின் நடவடிக்கைகள்

பிறப்பிப்பவர்: திரு.வீ.ஜெகதீசன்,

ந.க.எண்.6265/2020/பஅ2

நாள்:16.12.2020

ஊராட்சி ஒன்றிய அலுவலகம் சத்தியமங்கலம் 22 DEC 2020

நேரடி நியமனம் - ஈரோடு மாவட்டம் - தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் நடத்திய 2018-2018, 2019-2020 ம் ஆண்டிற்கான ஒருங்கிணைந்த சார்நிலைப் பணிகள் தொகுதி 4- இளநிலை உதவியாளர் தேர்வு - ஈரோடு மாவட்ட ஊரக வளர்ச்சி அலகிற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட - 7 இளநிலை உதவியாளர் பட்டியல் பெறப்பட்டது - பணி நியமனம் வழங்கி உத்தரவிடப்பட்டது - பணி வரன்முறை செய்து உத்தரவிடுதல்- தொடர்பாக

பார்வை:

1. தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய செயலர் அவர்களின் கடிதம் ந.க.எண்.2399/PSD-1/2020, நாள்: 28.05.2020
2. ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் நடவடிக்கைகள் ந.க.எண்.6265/2020/பஅ2, நாள்: 30.07.2020
3. சம்மந்தப்பட்ட அலுவலகங்களிலிருந்து பெறப்பட்ட பணியேற்பு அறிக்கைகள்

**உத்தரவு:-**

பார்வை 1ல் காணும் நடவடிக்கைகளின் படி ஈரோடு மாவட்ட ஊரக வளர்ச்சி அலகில் தமிழ்நாடு அமைச்சுப் பணி தொகுதி IV-ல் அடங்கியுள்ள பணிகளுக்கு 2018-2019 மற்றும் 2019-2020-ஆம் ஆண்டுகளுக்கான காலிப்பணியிடங்களுக்கு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் நடத்தப்பட்ட போட்டித் தேர்வு மூலமாக தேர்வு செய்யப்பட்டு இளநிலை உதவியாளர் நிலையில் பணிநியமனம் வழங்கப்பட்ட கீழ்க்காணும் 7 இளநிலை உதவியாளர்களுக்கு பார்வை-2ல் காணும் ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் நடவடிக்கைகளின்படி பணிநியமனம் வழங்கி உத்தரவிடப்பட்டுள்ளது. பார்வை 3-ன் படி தனியர்கள் பணியேற்பு செய்து கொண்ட விபரங்கள் சம்மந்தப்பட்ட அலுவலகங்களிலிருந்து பெறப்பட்டுள்ளது.

பார்வை 1-ல் காணும் கடிதத்தின்படி இம்மாவட்ட ஊரக வளர்ச்சி அலகில் தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் தொகுதி IV- ல் அடங்கியுள்ள பணிகளுக்கான தேர்வுகள் மூலம் தேர்வு செய்யப்பட்டு இளநிலை உதவியாளர்களாகப் பணிநியமனம் வழங்கப்பட்ட அலுவலர்களுக்கு உரிய நிபந்தனைகளுடன் பணிவரன்முறைப்படுத்திட அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

-த.பி.பா.-

| வ. எண். | பெயர்/ பதவி/ அலுவலகம் (திருவாளர்கள்) | பிறந்ததேதி | இ.நி.உ. ஆகப் பணியேற்பு செய்த நாள் | இ.நி.உ. நிலையில் பணிவரன் முறை செய்யப்படும் நாள் |
|---|---|---|---|---|
| 1. | அ.அருள்குமார், இளநிலை உதவியாளர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை அலுவலகம், ஈரோடு. | 29.06.1994 | 01.09.2020 மு.ப. | 01.09.2020 மு.ப |
| 2. | ப.மணிகண்டன், ஊர்நல அலுவலர் நிலை-2 ஊராட்சி ஒன்றியம், தாளவாடி | 12.06.1997 | 05.08.2020 மு.ப. | 05.08.2020 மு.ப. |
| 3. | ப.நவப்பிரியா, இளநிலை உதவியாளர் ஊராட்சி ஒன்றியம், மொடக்குறிச்சி. | 12.04.1987 | 04.08.2020 பி.ப. | 04.08.2020 பி.ப. |
| 4. | ல.சண்முகவள்ளி ஊர்நல அலுவலர் நிலை-2 ஊராட்சி ஒன்றியம், அம்மாப்பேட்டை. | 05.11.1993 | 03.08.2020 மு.ப. | 03.08.2020 மு.ப |
| 5. | த.வெங்கடேஷ் ஊர்நல அலுவலர் நிலை-2 ஊராட்சி ஒன்றியம், சத்தியமங்கலம். | 24.05.1992 | 05.08.2020 மு.ப. | 05.08.2020 மு.ப. |
| 6. | ஆ.கிருஷ்ணவேணி, ஊர்நல அலுவலர் நிலை-2 ஊராட்சி ஒன்றியம், பெருந்துறை. | 24.01.1994 | 03.08.2020 மு.ப. | 03.08.2020 மு.ப. |
| 7. | ம.விக்னேஷ் இளநிலை உதவியாளர், ஊராட்சி ஒன்றியம், தாளவாடி | 18.05.1994 | 05.08.2020 மு.ப. | 05.08.2020 மு.ப. |

மேற்படி பணிநியமனம் வழங்கப்பட்ட இவர்களது பணியினை பணியேற்பு செய்து கொண்ட நாள் முதல் கீழ்க்காணும் நிபந்தனைக்குட்பட்டு பணிவரன் முறைப்படுத்தி உத்தரவிடப்படுகிறது.

<u>நிபந்தனைகள்:-</u>

1. THE REGULARISATION IS SUBJECT TO THE OUTCOME OF THE WPs PENDING ON THE FILES OF THE HON'BLE HIGH COURT OF MADRAS/MADURAI BENCH OF THE HON'BLE HIGH COURT OF MADRAS REALTING TO THE RECRUITMENT TO THE POST INCLUDED IN COMBINED CIVIL SERVICES EXAMINATION -IV FOR THE YEAR 2018-2019 AND 2019-2020.

- தொடர்ச்சி -

2. மேற்காணும் பட்டியலில் உள்ள இளநிலை உதவியாளர் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்திலிருந்து முதுநிலைப்பட்டியல் பெறப்பட்டவுடன் இவர்களுக்கு முதுநிலை நிர்ணயம் செய்யப்படும். தற்போது பணி வரன்முறைப்படுத்துவதைக் கொண்டு தனியரது முதுநிலையில் மாற்றம் கோரிட இயலாது.

மேலும், தனியரது பணிப்பதிவேட்டில் உரிய பதிவுகள் மேற்கொள்ளுமாறு சம்பந்தப்பட்ட அலுவலகத் தலைவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

மாவட்ட ஆட்சியரின்
நேர்முக உதவியாளர் (வளர்ச்சி)
ஈரோடு மாவட்டம்,ஈரோடு.

16.12.2020

பெறுதல்
பட்டியலில் உள்ளவர்கள்
(அலுவலகத் தலைவர்கள் மூலம்).

நகல்: செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை-3 அவர்களுக்குப் பணிந்தனுப்பப்படுகிறது.

நகல்: இயக்குநர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்ககம், சென்னை -15 அவர்களுக்குப் பணிந்தனுப்பப்படுகிறது.

நகல்: இணை இயக்குநர்/திட்ட இயக்குநர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை ஈரோடு அவர்களுக்குப் பணிந்தனுப்பப்படுகிறது.

நகல்: சம்மந்தப்பட்ட வட்டார வளர்ச்சி அலுவலர்கள்(வ.ஊ./கி.ஊ) மொடக்குறிச்சி, பெருந்துறை, அம்மாப்பேட்டை, சத்தியமங்கலம், மற்றும் தாளவாடி.

நகல்: பஅ3 பிரிவு மற்றும் பஅ2 பிரிவு இருப்புகோப்பிற்கு.

ஊராட்சி ஒன்றியம்
சத்தியமங்கலம்

ந.க.எண்: 1349/2021 நாள்: 08.01.2021

அனுப்பப்படுகிறது

வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ)
சத்தியமங்கலம்.

8.1.21

பெறுதல்
திரு.த.வெங்கடேஷ்
உதவியாளர் அலுவலர் (கணக்கு)